அமராவதி நகர் சைனிக் பள்ளிக்கு என்சிசி டைரக்டர் ஜெனரல் வருகை

உடுமலை,செப்.3: தேசிய மாணவர் படையின் டைரக்டர் ஜெனரல் லெப்டினன்ட் ஜெனரல் குர்பிர்பால் சிங், அமராவதி நகரில் உள்ள சைனிக் பள்ளிக்கு வருகை தந்தார். அவருடன் கேரளா மற்றும் லட்சத்தீவு என்சிசி இயக்குநரகத்தின் கூடுதல் டைரக்டர் ஜெனரல்,மேஜர் ஜெனரல் ரமேஷ் சண்முகம் மற்றும் தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அந்தமான்-நிக்கோபார் என்சிசி இயக்குநரகத்தின் துணை டைரக்டர் ஜெனரல் கமோடர் எஸ்.ராகவ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குர்பில்பால் சிங்குக்கு துப்பாக்கி அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது.அவர் மாணவர்களை இந்திய ஆயுதப் படைகளில் சேர ஊக்குவித்தார். மேலும் தார்மீக மதிப்புகள், நேர்மை, சுயஒழுக்கம் குறித்து வலியுறுத்தினார். என்சிசி சிறுவர்கள் மற்றும் பெண்கள் இருவருக்கும் சம வாய்ப்புகளை வழங்குகிறது. கேடட்கள் சிறந்து விளங்க பாடுபட ஊக்குவிக்கிறது என்பதையும் அவர் எடுத்துரைத்தார்.

தனது சொற்பொழிவைத் தொடர்ந்து, என்.சி.சி டைரக்டர் ஜெனரல், மாணவர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார்.

▶ அமராவதிநகர் சைனிக் பள்ளிக்கு வந்த என்சிசி டைரக்டர் ஜெனரல் குர்பில்பால் சிங்குக்கு அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

காவிரி கூட்டுக்குடிநீர், இலவச வீட்டுமனை கேட்டு

வட்டாட்சியர் அலுவலகத்தில் மக்கள் முற்றுகை

தாராபுரத்தில் பரபரப்பு

தாராபுரம்,செப்.3: காவிரி கூட்டுக்குடிநீர், இலவச வீட்டுமனை பட்டா கேட்டு தாராபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தை பொதுமக்கள் முற்றுகையிட்டனர்

திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தை அடுத்த குண்டடம் ஊராட்சி ஒன்றியம் சூரியநல்லூர் ஊராட்சியில் உள்ளது மறவபாளையம் கிராமம். இங்கு பட்டியல் இன மக்கள் 100க்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். தங்கள் கிராமத்திற்கு காவிரி கூட்டுகுடிநீர் இணைப்பு கொடுக்க வேண்டும். அதேபோல் வீட்டுமனை பட்டா விரைவாக கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆதித்த மிழர் ஜனநாயக பேரவை நிறுவனத்தலைவர் பவுத்தன் தலைமையில் 30க்கும் மேற்பட்ட பெண்கள் நேற்று தாராபுரம் தாலுகா அலுவலகத்தில் திரண்டு முற்றுகையில் ஈடுபட்டனர். இதனால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

தகவல் அறிந்ததும், சிறப்பு முகாம் பணிக்காக சென்றிருந்த தாராபுரம் தாசில்தார் ராமலிங்கம் அலுவலகம் திரும்பினார். அவரிடம், போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தங்களது கோரிக்கை மனுவை கொடுத்தனர். அவர்கள் மனு மீது உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக தாசில்தார் உறுதி அளித்ததை தொடர்ந்து அனைவரும் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

▶ தாராபுரம் தாசில்தார் அலுவலகத்தில் முற்றுகையில் ஈடுபட்ட மறவபாளையம் கிராம மக்கள்.

கார் மோதி பெண் பலி

பல்லடம், செப். 3: பல்லடம் அருகே உள்ள சித்தம்பலம் கிராமத்தைச் சேர்ந்தவர் திருமலைசாமி. இவரது மனைவி மீனாட்சி (41). இவர், நேற்று முன்தினம் மாலை பல்லடம் அருகே கள்ளக்கிணறு பகுதியில் உறவினர் வீட்டிற்குச் சென்றுவிட்டு ஸ்கூட்டரில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது பல்லடம்- தாராபுரம் சாலையை கடக்க முயன்றபோது அந்த வழியாக சென்ற கார் எதிர்பாராத விதமாக ஸ்கூட்டர் மீது மோதியது.

இதில் படுகாயம் அடைந்த அவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு, பல்லடம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர் ஏற்கனவே மீனாட்சி இறந்து விட்டதாக தெரிவித்தார். புகாரின்பேரில் பல்லடம் போலீசார் விசாரணை நடத்தினர்.

தொழிலாளியின் ஸ்கூட்டரை பறித்து சென்றவர் சிக்கினார்

திருப்பூர், செப். 3: திருப்பூர், சிறுபூலுவபட்டி அடுத்த காவிலிபாளையம், மாரியம்மன் கோயில் வீதியை சேர்ந்தவர் தனபால் (36). பனியன் நிறுவன தொழிலாளியான இவர், நேற்று முன்தினம் வஞ்சிபாளையம் ரோட்டில் உள்ள டாஸ்மாக் பாரில் மது அருந்திக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த சிறுபூலுவபட்டியை சேர்ந்த ரஞ்சித்குமார் (35) என்பவர் தனபாலிடம் மது வாங்கி கொடுக்குமாறு கேட்டுள்ளார். இதற்கு தனபால் மறுப்பு தெரிவித்ததாக கூறப்படுகிறது. இதனால் ஆத்திரமடைந்த ரஞ்சித்குமார், தனபாலில் ஸ்கூட்டரை பறித்துச் சென்றார்.

இதுகுறித்து தனபால், 15.வேலம்பாளையம் போலீஸ் நிலையத்தில் புகாரளித்தார். போலீசார் வழக்குப்பதிவு செய்து ரஞ்சித்குமாரை கைது செய்து ஸ்கூட்டரை மீட்டனர்.

தீரன் சின்னமலை மகளிர் கல்லூரியில் எழுத்துலக சாதனை நிகழ்ச்சி

திருப்பூர், செப். 3: தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இலக்கிய மன்றம் மற்றும் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் இணைந்து சூழலியல் எழுத்தாளர் கோவை சதாசிவத்தின் 50 ஆண்டுகால எழுத்துலக சாதனை நிகழ்ச்சியை நேற்று நடத்தியது.

நிகழ்ச்சிக்கு, கல்லூரி முதன்மை அதிகாரி ரேச்சல் நான்சி பிலிப் தலைமை தாங்கினார். தமுஎகச சங்கசெயலாளர் தினகரன் வரவேற்றும், கல்லூரி முதல்வர் மோகனசவுந்தரி வாழ்த்தியும் பேசினர். சூழலியல் எழுத்தாளர் கோவை சதாசிவம் சிறப்புரை ஆற்றினார். கோவை வழக்கறிஞரும், எழுத்தாளருமான கரீம்,

தமுஎகச எழுத்தாளர் சம்சுதீன் ஹீரா, தமிழ்நாடு அறிவியல் இயக்க செயலாளர் ராமமூர்த்தி,

பழங்குடி மக்கள் செயல்பாட்டாளர் அன்புராஜ், கேபிஆர் கலை அறிவியல் கல்லூரி உதவி பேராசிரியர் பரிமளா, தமுஎக சங்க தலைவரும், கவிஞருமான சம்பத்குமார், தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதலாமாண்டு நுண்ணுயிரியல் துறை மாணவி சாதனா ஆகியோர் பேசினர். முடிவில், தமிழ்த்துறை பேராசிரியர் தேன்மொழி நன்றி கூறினார்.

காங்கயம் கொப்பரை மார்க்கெட்

கொப்பரை சாதா (கிலோ)	ரூ.215
கொப்பரை ஸ்பெசல் (கிலோ)	ரூ.218
தேங்காய் பவுடர் கிலோ	ரூ.225
தேங்காய் எண்ணெய் (15 கிலோ டின்)	ரூ.4,870
தேங்காய் டன்	ரூ.50,000
கருப்பு தேங்காய் டன்	ரூ.53,000
தேங்காய் தொட்டி டன்	ரூ.25,000

அணைகளின் நீர்மட்டம்



அணை	மொத்த கொள்ளளவு	நீர்மட்டம் அடி	நீர் வரத்து கன அடி	வெளியேற்றம் கனஅடி
சோலையார்	160 அடி	160.18	1448.84	1632.46
பரம்பிக்குளம்	72 அடி	71.60	2307	2440
ஆழியார்	120 அடி	119	355	517
திருமூர்த்தி	60 அடி	56.24	882	1058
அமராவதி	90 அடி	88.09	667	709

pnb Housing Finance Limited Ghar Ki Baat

பிற்சேர்க்கை-IV-A

அசையாச் சொத்து(கள்) மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம் 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம்-விற்பனை அறிவிப்பு

பதிவு அலுவலகம்: 9வது தளம், அந்துரிக்ஷ் பவன், 22, கஸ்தூரபா காந்தி மார்க், புதுடெல்லி-110 001, தொலைபேசி: 011-23357171, 23357172, 23705414, இணையதளம்: www.pnbhousing.com

கோயம்புத்தூர் கிளை அலுவலகம்: பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், 1112, ராஜா பிளாசா, 2ஆவது தளம், லக்ஷ்மி மில் ஜங்ஷன், கோயம்புத்தூர்-641037.

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் நிரல் எண்-A இல் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) & ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டுக் கடனந்தோரிடம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, M/s. பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ கடனீட்டுக் கடனந்தோரின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஆக்கப்பூர்வ/கையக சுவாதீனம் (நிரல் எண்-C இல் விவரிக்கப்பட்டவாறு) செய்யப்பட்டிருக்கும் நிரல் எண்-D இல் குறிப்பிட்டுள்ள கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்து (கள்) ஆனது, கீழே குறிப்பிட்ட விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில், உள்ளது உள்ளவாறு மேலும் உள்ளது எதுவோ அது அந்தப்படையில்" விற்பனை செய்யப்பட உள்ளது. நாளது தேதியத் திருத்தப்படி கடனீட்டுக் சொத்து உரிமை அமலாக்கம் விதிகள், 2002 இன் விதி 8(6) & 9 கீழ் நிரல் எண்-A இல் குறிப்பிட்டவாறு கடன்தாரர்(கள்)/அடமானதாரர்(கள்)/ சட்டப்பூர்வ வாரிசுகள், சட்டப்பூர்வ பிரதிநிதி, (தெரிந்தது அல்லது தெரியாதது), நிறைவேற்றுநர்(கள்), நிர்வாகி(கள்), வாரிசு(கள்), உரிமையாற்றோர்(கள்) ஆகியோருக்கு இதன்மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, M/s. பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின்/கடனீட்டுக் கடனந்தோரின் இணையதளம் அதாவது www.pnbhousing.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பினைப் படிக்கவும்.

கடன் எண்/ கடன்தாரர்/ ஜாமீன்தாரர்(கள்)/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர் (A)	கோரப்பட்ட தொகை &நாள் (B)	சுவாதீன தன்மை (C)	அடமானச் சொத்துகள் விவரம் (D)	நிர்ணய விலை (RP) (E)	முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையில் 10%) (F)	ஏலப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள் (G)	ஏலம் உயர்த்தும் விகிதம் (H)	பார்வையிடும் நாள் & நேரம் (I)	ஏலம் நாள் & நேரம் (J)	எதிர்த்த விண்ணப்பங்கள்/ நிர்ணய வழக்கு ஏதேனுமிருந்தால், (K)
HOU/COI/0720/801592, கி. அ.: கோயம்புத்தூர் கார்த்திக் C S, மோனிஷா S	13.11.2024 தேதியன்று ரூ.1944468.67	கையக சுவாதீனம்	S.F.No.72/1 பகுதி, 73/1 பகுதி, மனை எண்.2 மேற்கு பகுதி, தொண்டாமுத்தூர், வீரகேரளம் கிராமம், கோயம்புத்தூர், தமிழ்நாடு-641007, இந்தியா.	Rs. 2580000	Rs. 258000	13-10-2025	Rs. 10,000	18.09.2025 காலை 11 மணி முதல் மாலை 5.00 மணி வரை	14.10.2025 பகல் 2.00 மணி முதல் 3.00 மணி வரை	அறியப்படாதது
HOU/COI/0616/291503 கி.அ.: கோயம்புத்தூர் கார்த்திகேயன் B,கீதாரஞ்சனி R	11-09-2023 தேதியன்று ரூ.12797079.12	கையக சுவாதீனம்	மனை எண்.35, S.F.No.376, எண்.35, எலிசியம் காசா டெல்சால், சின்னவேடம்பட்டி கிராமம், கோயம்புத்தூர், தமிழ்நாடு-641049, இந்தியா.	Rs. 10980000	Rs. 1098000	22-09-2025	Rs. 1 Lakh	12.09.2025 காலை 11 மணி முதல் மாலை 5.00 மணி வரை	23.09.2025 பகல் 2.00 மணி முதல் 3.00 மணி வரை	அறியப்படாதது

*பொருந்துமாறு ஆண்டுக்கு 18% விகிதத்தில் மேற்கண்டு வட்டி, அத்தகான பணப்பட்டுவோடா மற்றும்/அல்லது பணமாக்கும் தேதி வரை ஏற்பட்ட சாதாரண செலவினங்கள், செலவு கட்டணங்கள் ஏலமையற்றுடன் சேர்த்து. ** பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் அதிகாரப்பூர்வ அதிகாரிக்கு நன்கு தெரிந்த மற்றும் அறிந்த வரையில், நிரல் எண்-K இல் அறிவிக்கப்பட்டது தவிர்த்து மேற்குறிப்பிட்ட அசையா/கடனீட்டுச் சொத்துகள் தொடர்பான பிற விவரங்கள்கள்/ கோருரிமைகள் இல்லை. மேற்கொண்டு இவ்விதத விவரங்கள்கள் ஆனது வந்தநிலையோ நீதிமன்ற/ஏஜாரர் மூலம் அவருடைய தரப்பில் வழங்கப்பட/செலுத்தப்பட வேண்டும். எதிர்நோக்கும் கொள்முதலாளர்(கள்)/ ஏஜதாரர்கள் குறிப்பிட்டுள்ள விவரங்கங்களின் உண்மைத்தன்மையை தனிப்பட்ட உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. நாளது தேதிப்படி, மேற்கூறிய அசையாச் சொத்துகள்/கடனீட்டுச் சொத்துகளை விற்பனை செய்தல், உரிமை மாற்றுதல் மேலும்/அல்லது விற்றுத் தீர்ப்பதற்கு பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ பிஎன்எம்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியை தடுக்கும் ஆணை மேலும்/அல்லது நீதிமன்ற தடையுத்தரவு எதுவுமில்லை. 2. எதிர்நோக்கும் கொள்முதலாளர்/ஏஜதாரர் மற்றும் விருப்பமுள்ள நபர்கள் பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் வசமிருக்கும் அதற்கு தொடர்பான உரிமைப்பத்திரத்தின் ஆவணப் பத்திரம் உட்பட ஆனால் வரம்புக்குட்படாது நிரல் எண்- K இல் தெரிவிக்கப்பட்ட செயல்பாட்டிலுள்ள வழக்குகள்/ வழங்கப்பட்ட ஆணைகள் ஏனையவை ஏதேனுமிருந்தால் அவற்றை தனிப்பட்டு ஆய்வு செய்து கொள்ளலாம் மேலும் ஒப்பந்தப்புள்ளி/ஏலப்புள்ளி விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கும் முன்பு அல்லது ஒப்பந்தப்புள்ளி(கள்) வழங்கும் முன்பு அனைத்து விதத்திலும் தாமாகவே திருப்திபடு வேண்டும். ஏலதாரர்(கள்) ஏலப்புள்ளிப் படிவத்துடன் இந்த ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் கையெழுப்பிட வேண்டும். 3. கடனீட்டுக் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(3) இன்படி, ஏலதாரர்(கள்)/ கொள்முதலாளர் அதே நாளில் அல்லது அடுத்த வேலை நாளுக்கு மிகாமல் விற்பனை மதிப்பீட்டில் 25% தொகையை, (முன்வைப்புத்தொகை ஏதேனும் செலுத்தப்பட்டிருந்தால் அவை உட்பட) செலுத்துவதற்கு கட்டப்பூர்வமாக கட்டுப்பட்டவர். கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(2) இன்படி கடனீட்டுக் கடனந்தோர் மூலம் விற்பனை விலையின் 25% பெற்ற பிறகு மட்டும் ஏலதாரர்(கள்) பெயரில் விற்பனை உறுதிப்படுத்தப்படும். விற்பனை பரிசீலனைத் தொகையின் மீதமுள்ள 75% ஆனது விற்பனை உறுதிக் கடிதம் ஒப்புகைத் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும் மேலும் இல்லிதம் செலுத்தத் தவறினால், சொத்து/கடனீட்டுச் சொத்து மறுவிற்பனை செய்யப்படும். 4. மனை எண். 68, 3ஆவது தளம், செக்டார் 44, குர்கான், ஹரியானா 122003 என்ற இடத்தில் அதன் கார்பரேட் அலுவலகம் கொண்டிருக்கும் மற்றும் இணையதளம்-www.bankeauctions.com உடைய M/s. சி1 இந்தியா பிரைவேட் லிமிடெட், மின்-ஏலம் மூலம் விற்பனை மேற்கொள்வதில் அதிகாரப்பூர்வ அதிகாரிக்கு உதவும். சொத்து பார்வையிடுதல் அல்லது ஏலப்புள்ளி ஆவணங்கள் பெறுதல் தொடர்பான அனைத்து உதவிக்கு மேலும் ஏதேனும் பிற விசாரணைக்கு அல்லது பதிவுபெறுவதற்கு, திரு. ஸ்ரீசரன் M/ துர்கேஷ் / ஜோதிகண்ணன், செல்பேசி: 9738931789/9042840151/ 9840487424 என்பவருடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். அல்லது www.pnbhousing.com காணவும்.

இடம்: கோயம்புத்தூர் நாள்: 03-09-2025

அதிகாரப்பூர்வ அதிகாரி, M/s.பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

TNPSC GROUP-2, 2A தினகரன் மாதிரி வினாவிடை

பொது அறிவு

1411. அயோத்தி, இந்திரபிரஸ்தம் மற்றும் மதுரா ஆகியவை ---- காலத்தில் உருவாயின.
(A). சிந்து சமவெளி நாகரிகம்
(B). பிற்கால வேத காலம்
(C). ஆரம்ப வேத காலம்
(D). எதுவுமில்லை

1412. தொடக்க வேத காலத்தில் பின்வருவனவற்றில் எது நடைமுறையில் இருந்தது?
(A).) குழந்தை திருமணம் (B). சதி
(C). விதவை மறுமணம்
(D). மேலே உள்ள அனைத்தும்

1413. வேத காலத்தில் இருந்த தொழில் எது?
(A). தேர் தயாரிப்பாளர்கள்
(B). தச்சர்கள்
(C). குயவர்கள்
(D). மேலே உள்ள அனைத்தும்

1414. வேத கால மக்களின் புனித விலங்கு
(A). காளை (B). பசு
(C). எருமை (D). சிங்கம்

1415. பண்டைய தமிழகத்தில் பெருங்கற்காலம் _____ உடன் ஒத்துபோகிறது
(A). சங்கத்திற்குப் பிந்தைய காலம்
(B). சங்கத்திற்கு முந்தைய காலம்
(C). மௌரியனுக்குப் பிந்தைய காலம்
(D). மௌரியனுக்கு முந்தைய காலம்

1416. கொடுமணல் _____ மாவட்டத்தில் அமைந்துள்ளது
(A). ஈரோடு (B). தேனி
(C). திருப்பூர் (D). சிவகங்கை

1417. பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?
1) கௌதமர், ஜினா ஆனார், அதாவது 'உலக இன்பத்தையும் பற்றுதலையும் வென்றவர்'
2) அவரைப் பின்பற்றுபவர்கள் சமணர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்.
(A). 1 மட்டும் (B). 2 மட்டும்
(C). 1, 2 (D). இல்லை

1418. பின்வருவனவற்றில் மகாவீரரின் திரிரத்னங்கள் அல்லாதவை எவை?
(A). நல்ல நம்பிக்கை (B). நல்ல அறிவு
(C). நல்ல செயல் (D). நல்ல நோக்கம்

1419. பின்வருவனவற்றில் எது சரியாகப் பொருந்துகிறது?
1) சத்யா- உண்மையைப் பேசுதல்
2) அஸ்தேயா-சொத்துகளின் மீது ஆசை கொள்ளாமை
(A). 1 மட்டும் (B). 2 மட்டும்
(C). 1, 2 (D). இல்லை

1420._____ நாளில் புத்தர் ஞானம் அடைந்தார்.
(A). 48வது (B). 49வது
(C). 50வது (D). 51வது

1421. இந்தியாவில் சமண மதம் பரவலாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான முக்கியக் காரணம் என்ன?
(A). மக்களின் பேசும் மொழியைப் பயன்படுத்துதல்
(B). புரிந்து கொள்ளும் படியான போதனை
(C). சமணத் துறவிகளின் விடாமுயற்சி
(D). மேலே உள்ள அனைத்தும்

1422. புத்தர் தனது முதல் சொற்பொழிவை எங்கு நிகழ்த்தினார்
(A). கயா (B). காசி
(C). கோசல (D). சாரநாத்

1423. பின்வரும் கூற்றுகளில் எது தவறானது?
1). பௌத்தம் கர்மாவின் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டது
2). புத்தர் கடவுள் இருப்பதை மறுத்தார்
(A). 1 மட்டும் (B). 2 மட்டும்
(C). 1, 2 (D). மேற்கண்ட எதுவுமில்லை

1424. எந்த பேரரசு மற்ற மகாஜனபதங்களை விட இரும்பை சாதகமாக்கியது?
(A). காசி (B). கோசல
(C). அவந்தி (D). மகதம்

1425. பின்வருவனவற்றில் எது 16 மகாஜனபதங்களில் ஒன்றல்ல?
(A). சூரசேனா (B). அஸ்ஸகா
(C). சிந்து (D). குரு

1426. மகத வம்சத்தை நிறுவியவர் யார்?
(A). பிம்பிசாரர் (B). பிந்துசாரர்
(C). அஜாதசத்ரு (D). கலாசோகா

1427. ஹரப்பா நாகரிகம் எந்த ஆண்டு முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது?
(A). 1905 (B). 1920
(C). 1921 (D). 1922

1428. பின்வருவனவற்றில் மௌரியப் பேரரசின் கல்வெட்டுகள் யாவை?
(A). அசோகரின் ஆணைகள்
(B). ஜூனாகத் கல்வெட்டு
(C). காஞ்சி கல்வெட்டு
(D). (A). மற்றும் (B). இரண்டும்

1429. பின்வருவனவற்றில் மௌரியப் பேரரசின் வெளிநாட்டு அறிவிப்புகள் யாவை?
(A). தீபவம்சம் (B). மகாவம்சம்
(C). இண்டிகா (D). அனைத்தும்

1430. சந்திரகுப்த மௌரியரை தென்னிந்தியாவிற்கு அழைத்துச் சென்றவர் யார்?
(A). பத்ரபாகு (B). சிம்மசேனா
(C). நயனிகா (D). இல்லை

1431. தேவனாம் பையா என்று அழைக்கப்படும் மௌரிய மன்னர் யார்?
(A). சந்திரகுப்த மௌரியா (B). அசோகர்
(C).) பிந்துசாரர் (D). பிம்பிசாரர்

1432. மௌரிய நிர்வாகம் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?
1). காடுகள், சுரங்கங்கள், உப்பு மற்றும் நீர்ப்பாசனம் ஆகியவற்றின் மீதான வரிகளின் வருவாய் அரசாங்கத்திற்கு முக்கிய வருவாயை வழங்கியது.
2). அரச வருவாயில் பெரும்பகுதி ராணுவத்தினருக்கு, அரச அரசாங்கத்தின் அதிகாரிகளுக்கு ஊதியம் கொடுப்பதற்காகவே செலவிடப்பட்டது
(A). 1 மட்டும் (B). 2மட்டும்
(C). 1 மற்றும் 2 (D). மேற்கண்ட எதுவுமில்லை

1433. சிந்து சமவெளி நாகரீகம் பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் எது சரியானது?
1). மொஹஞ்சதாரோவைச் சேர்ந்த நடனமாது சிலை இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட தொடக்ககால வெண்கலச் சிற்பமாகும்.
2). 'மெழுகு வார்ப்பு' நுட்பத்தைப் பயன்படுத்தி வெண்கலச் சிலைகள் செய்யப்பட்டன
(A). 1 மட்டும் (B). 2 மட்டும்
(C). இரண்டும் சரி (D).இரண்டும் தவறு

1434. மௌரியர் ஆட்சியின் போது ராணுவத்தின் உச்ச தளபதி யார்?
(A). சேனாபதி (B). புரோகித்
(C). மன்னர் (D). யுவராஜா

1435. சாரநாத் தூணில் உள்ள மகுடமான உறுப்பு
(A). சிங்கம் (B). புலி
(C). தர்ம சக்கரம் (D). மயில்

1436. குஜராத்தில் உள்ள லோத்தலில் கண்டுபிடிக்கப்பட்ட 1704மிமீ அளவுள்ள பழங்கால பொருள்?
(A). வெண்கல சிலை (B). களிமண் பானை
(C). தந்தத்தாலான அளவுகோல்
(D). கல் முத்திரை

1437. பின்வருவனவற்றுள் தவறான கூற்று எது?
(A). மெஹர்கர் சிந்து நாகரிகத்தின் முன்னோடியாகும்
(B). மெஹர்கர் ஹரப்பா நாகரிகத்தின் பகுதி
(C). இது பாகிஸ்தானில் பலுசிஸ்தானின் போலான் படுகையில் அமைந்துள்ளது.
(D). கிமு 7000 (கி.மு.) முற்பகுதியில் மெஹர்கரில் புதிய கற்கால கலாச்சாரம் இருந்ததாக தொல்பொருள் சான்றுகள் தெரிவிக்கின்றன.

1438. சிந்து சமவெளி நாகரிகத்தைச் சேர்ந்த மக்கள் நகைகளை வடிவமைக்க எந்தக் கல்லைப் பயன்படுத்தினார்கள்?
(A). மாணிக்க கல் (B). நீல நிறக்கல்
(C). கார்னிலியன் (D). தந்தம்

1439. பின்வருவனவற்றுள் சரியானதை தேர்ந்தெடு
(A). சிந்து சமவெளி நாகரிகத்தின் மக்கள் குதிரைகளைப் பற்றி நன்கு அறிந்தவர்கள் மற்றும் இரும்பை அதிகமாகப் பயன்படுத்தினர்.
(B). குதிரைகள் பற்றி தெரியும் ஆனால் சிந்து சமவெளி நாகரிக மக்களுக்கு இரும்பு பற்றி தெரியாது
(C). குதிரை மற்றும் இரும்பு இரண்டும் சிந்து சமவெளி நாகரிக மக்களுக்குத் தெரியாது.
(D). சிந்து சமவெளி நாகரிக மக்களுக்கு இரும்பு தெரியும் ஆனால் குதிரைகள் பற்றி தெரியாது.

1440. சிந்து சமவெளி நாகரிகத்தின் பின்வரும் எந்த தளத்தில் கப்பல்துறை கண்டுபிடிக்கப்பட்டது?
(A). சன்ஹுதாரோ (B). லோத்தல்
(C). காளிபங்கன் (D). பனாவாலி

1441. அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மக்கள் அங்காடியிலிருந்து வாங்கிப் பயன்படுத்தும் பொருட்கள் _____ என்று அழைக்கப்படுகின்றன.
(A). அத்தியாவசிய பொருள்
(B). நுகர்வுப் பண்டங்கள்
(C). நுகர்வோர் சேவை
(D). அங்காடி பொருள்

1442. பின்வருவனவற்றுள் எது முதல் நிலை தொழில்களில் அல்லாதவை?
(A). வேளாண்மை (B). சுரங்கத் தொழில்
(C). வங்கி சேவை (D). மீன் பிடித்தல்

1443. எந்த துறையானது மக்களின் அன்றாடத் தேவைகளையும் பூர்த்தி செய்கிறது?
(A). முதன்மைத் துறை
(B). இரண்டாம் நிலை துறை
(C). சேவைத் துறை
(D). வேளாண்மை

1444. கிராமங்கள் நமது நாட்டின் முதுகெலும்பு என்று கூறியவர் யார்?
(A). காந்திஜி (B). நேதாஜி
(C). அம்பேத்கர் (D). காமராஜர்

1445. மூலப்பொருட்கள் பெரிய அளவில் இயந்திரங்கள் மூலம் முடிக்கப்பட்ட பொருட்களாக மாற்றப்படுகின்றன. இந்த நடவடிக்கைகள் _____ அழைக்கப்படுகின்றன
(A). முதல் நிலை தொழில்கள்
(B). இரண்டாம் நிலை தொழில்கள்
(C). மூன்றாம் நிலை தொழில்கள்
(D). தொழிற்சாலை தொழில்கள்

1446. உற்பத்தியாளரிடமிருந்து பொருளை வாங்குபவராகவும், உற்பத்தியாளருக்குப் பொருளை வழங்குபவராகவும் செயல்படுபவர் யார்?
(A). உற்பத்தியாளர் (B). நுகர்வோர்
(C). தயாரிப்பாளர் (D). வழங்குபவர்

1447. இந்தியப் பொருளாதாரம் ஒரு
(A). முதலாளித்துவப் பொருளாதாரம்
(B). கலப்பு பொருளாதாரம்
(C). கட்டளை பொருளாதாரம்
(D). சந்தை பொருளாதாரம்

1448. அறிவைப் பெற நுகர்வோருக்கு உரிமை உண்டு". உரிமையை அடையாளம் காணவும்.
(A). தகவல் அறியும் உரிமை.
(B). தேர்ந்தெடுக்கும் உரிமை
(C). நுகர்வோர் கல்விக்கான உரிமை
(D). மேலே எதுவும் இல்லை

1449. கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றை காண்க.
(A). ஒரு பொருளாதாரத்தில் அனைவரும் நுகர்வோர். ஆனால், அனைவரும் உற்பத்தியாளரோ அல்லது விற்பனையாளர்களோ அல்ல.
(B). ஒரு பொருளாதாரத்தில் அனைவரும் உற்பத்தியாளர் ஆனால், அனைவரும் நுகர்வோர் அல்லது விற்பனையாளர்களோ அல்லர்.
(C). ஒரு பொருளாதாரத்தில் அனைவரும் விற்பனையாளர். ஆனால், அனைவரும் நுகர்வோரோ அல்லது உற்பத்தியாளரோ அல்லர்.
(D). மேலே எதுவும் இல்லை

1450. ஒரு பொருளின் வடிவம் மாற்றப்படும்போது, அதன் பயன்பாடு
(A). குறைகிறது (B). குறையாது
(C). மிகுதியாகிறது (D). அதிகமாகாது

1451. நமது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெரும்பங்கு வகிப்பவை
(A). முதன்மை துறை (B). 2ம் துறை
(C). 3ம் துறை (D). வேளாண் துறை

1452. முதன்மை உற்பத்திக் காரணிகள் என்பவை
(A). நிலம் மற்றும் மூலதனம்
(B). நிலம் மற்றும் உழைப்பு
(C). உழைப்பு மற்றும் மூலதனம்
(D). மூலதனம் மற்றும் தொழிலமைப்பு

1453. "நவீன பொருளாதாரத்தின் தந்தை யார்?
(A). ஆடம்ஸ்மித் (B). JM கீன்ஸ்
(C). அமர்த்தியா சென் (D). ரிச்சர்ட்

1454. "நாடுகளின் செல்வத்தின் இயல்பும், காரணங்களும் பற்றிய ஓர் ஆய்வு" - என்ற நூலை எழுதியவர்?
(A). JM கீன்ஸ் (B). அமர்த்தியா சென்
(C). ஆல்ஃபிரட் மார்ஷல் (D). ஆடம்ஸ்மித்

1455. ஒரு ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த பண மதிப்பைக் குறிப்பது
(A). மொத்த தேசிய உற்பத்தி
(B). நிகர உள்நாட்டு உற்பத்தி
(C). மொத்த உள்நாட்டு உற்பத்தி
(D). ந